<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>

<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**MCOP.No:** 80/2023 நாள் 09.09.2025

ம.சா.2, திரு.மரியஅந்தோணிசாமி

**மா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை—**

எனக்கு சொந்த ஊர் விருதுநகர். நான் சாட்சியம் அளித்துக்கொள்ள நீதிமன்றத்தில் இருந்த அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் நான் குடியிருக்கும் விலாசத்தை பொறுத்து அதனை காண்பிக்கககூடிய ஆதார் அட்டையினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் போலிசார் குற்ற இறுதிஅறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் வரைபடம் பார்வையிட்டால் சம்பவ இடத்தை பொறுத்து என்னால் சொல்லமுடியும் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையில் இரண்டு பக்கமும் தடுப்பு கம்பி வேலி போடப்படுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையானது நான்கு சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். அதனால் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன ஆகாஸ் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டுவந்தவர் என்றால் சரிதான். அவர் சாலையின் வலதுபக்க ஓரத்தில் இருந்த இடதுபக்கம் ஓரம் செல்வதற்காக சாலையை கடக்க முயன்றார் என்ற விபரம் எனக்கு தெரியும். அவர் தான் அவ்வாறு சாலையை கடக்க முயன்ற போது எதிரே வந்த அரசு பேருந்தை கவனிக்காமல் அவராகவே பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநர் சாலை விதிகளை மதித்து மெதுவாகவும் கவனமாகவும் அரசு பேருந்தை ஓட்டிச்சென்றார் என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாகிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாகவும் இந்த

மனுதாரர்களுக்கு அதிக இழப்பீடு பெற்று தரவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்தை நான் நேரடியாக பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of September 2025

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.